DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE OF GUDALUR

Calender
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. **STC No.649/2024**

Deposition of witness for

Prosecution **PW - 2**
Deffence
Court

Name : **திரு. மெல்கி சேதேக் டேனியல், சிறப்பு உதவி ஆய்வாளர்**

Father's/Husband's Name: **திரு.டேனியல்**

Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 24.03.2026.

**(எதிரிகள் ஆஜரில் இல்லை. எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு - 317/ 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது மசினகுடி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் பிரபாகரன் தற்போது பணி மாறுதல்

G.SARAVANAKUMAR Digitally signed by G.SARAVANAKUMAR Date: 2026.03.24 19:20:43 +0530

காரணமாக வேறு காவல் நிலையத்தில் பணியாற்றி வருகிறார். மசினகுடி காவல் நிலைய குற்ற எண். 159/2024 வழக்கின் நிலைய நாட்குறிப்பு மற்றும் வழக்கு கோப்புகள் அடிப்படையில் வழக்கு விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். கோப்புகள் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 16.09.2024 அன்று உதவி ஆய்வாளர் பிரபாகரன் தலைமையில் காவலர் பழனி மற்றும் காவலர் கோவிந்தராஜ் ஆகியோரும் அன்றைய தினம் 16.00 மணிக்கு தெப்பக்காடு பகுதியில் கண்காணித்து பின் கக்கநல்லா சோதனை சாவடி வந்து வாகன தணிக்கை செய்யும்போது அங்கு வந்த ஒரு போக்கு வாகனத்தில் சந்தேகத்திற்கிடமான வகையில் வந்த இரண்டு நபர்கள் மீது கஞ்சா வாடை வீசியது.

3. அதனால் அவர்களிடம் உதவி ஆய்வாளர் உங்களிடம் கஞ்சா வாடை வீசுகிறது, அதற்கு உங்களை சோதனை செய்ய வேண்டும் அதற்காக உங்களை ஏதேனும் அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரி அல்லது நீதித்துறை நடுவர் முன்னிலையிலோ அழைத்து சென்று சோதனையிடலாமா என்று கேட்டபோது, அவர்கள் எங்களை நீங்களே சோதனையிடலாம் என்று கூறிய பின்னர் அவர்களின் பெயர் விலாசம் விசாரிக்க ராஜு, த/பெ.சுகுமார், பிங்கர்போஸ்ட், உதகை என்றும் மற்றொரு நபர் சியாம், த/பெ. செபாஸ்டின், பிங்கர்போஸ்ட், உதகை என்றும், அவர்களிடம் 17.15 மணிமுதல் 17.30 மணிவரை சோதனை செய்ய சோதனை விருப்ப

G.SARAVANAKUMAR Digitally signed by G.SARAVANAKUMAR
Date: 2026.03.24 19:20:50 +0530

கடிதம் தயார் செய்து மேற்படி நபர்களுக்கு முழுவதும் படித்து காண்பித்து அவர்களிடம் கையொப்பம் வாங்கினார்.

4. அவர்களை உதவி ஆய்வாளர் சோதனை செய்து பார்த்தபோது, ராஜு மற்றும் சியாம் ஆகியோரது பேண்ட்டின் வலது பாக்கெட்டில் ஒரு பிளாஸ்டிக் கவரில் இலை, மொக்கு மற்றும் காம்புடன் கூடிய காய்ந்த நிலையில் கஞ்சா இருந்தது. இந்த கஞ்சாவை பற்றி மேற்படி நபர்களிடம் விசாரணை செய்தபோது அவர்கள் கஞ்சாவை கர்நாடக மாநிலம் மைசூரிலிருந்து கஞ்சாவை குறைந்த விலைக்கு வாங்கி வந்து தாங்கள் வசிக்கும் பகுதியில் தனது நண்பர்களுக்கும் கஞ்சா பிரியர்களுக்கும அதிக விலைக்கு விற்பனை செய்து லாபம் சம்பாதிக்கலாம் என்று எடுத்து வந்ததாக ஒப்புக்கொண்டவரை, உதவி ஆய்வாளர் காலை 17.45 மணிக்கு கைது செய்தார்.

5. எதிரிகள் ஆஜர்படுத்திய கஞ்சாவை அருகில் இருந்த தராசில் எடை போட்டு பார்த்தபோது தலா 20 கிராம் இருந்தது. மேலும் எதிரி ராஜு மற்றும் எதிரி சியாம் என்பவர்களிடமிருந்த கஞ்சாவை கைப்பற்றுதவதற்கு பொது ஜனங்கள் யாரும் சாட்சியாக இருக்க முன்வராததால் உதவி ஆய்வாளருடன் பணியிலிருந்த காவலர் பழனி மற்றும் காவலர் கோவிந்தராஜ் முன்னிலையிலும் 18.00 மற்றும் 18.15 மணியளவில் கைப்பற்றுதல் மகஜர்கள் தயார் செய்து கைப்பற்றினார்.

G.SARAVANAKUMAR

Digitally signed by G.SARAVANAKUMAR
Date: 2026.03.24 19:20:55 +0530

6. இன்று நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள தலா 20 கிராம் எடை கொண்ட கஞ்சாதான் அதுவாகும். பின்னிட்டு 18.45 மணியளவில் எதிரிகள் மற்றும் கைப்பற்றப்பட்ட கஞ்சாவுடன் மசினகுடி காவல் நிலையம் வந்து எதிரிகள் மீது மசினகுடி காவல் நிலைய குற்ற எண்.159/2024 என சட்டப்பிரிவு 8(c) உ/இ. 20(b)(ii)(A) NDPS Act – 1985-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் (**அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகும்**). சாட்சிகளான காவலர்கள் பழனி மற்றும கோவிந்தராஜ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். எதிரிகளை தக்க நிலைய பிணையில் விடுவித்துள்ளார். வழக்கு சொத்தான தலா 20 கிராம் எடையுள்ள கஞ்சாவை படிவம் - 91 மூலம் கனம் நீதிமன்றத்தில் ஒப்படைத்து P.R.எண்.180/2024 பெற்றுள்ளார் (**அந்த படிவம் - 91 அ.சா.ஆ.6 ஆகும்**). அந்த தடயச் சொத்தானது படிவம் 4 மற்றும் படிவம் 5 ன் மூலம் பகுப்பாய்விற்கு அனுப்பப்பட்டுள்ளது. **அந்த படிவம் 4 அ.சா.ஆ.7 மற்றும் படிவம் 5 அ.சா.ஆ.8 ஆகும்.** இத்துடன் இவ்வழக்கின் புலன்விசாரணையை முடித்து எதிரிகள் மீது உதவி ஆய்வாளர் சட்டப்பிரிவு 8(c) உ/இ. 20(b)(ii)(A) NDPS Act – 1985-ன் கீழான குற்றத்திற்கு குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :

1. சம்பவ இடமானது வனத்துறையினர் பசுமை வரி வசூலிப்பவர்கள் இருக்கக் கூடிய இடம் என்றால் சரிதான்.வனத்துறையினரும்,பசுமை வரி

G.SARAVANAKUMAR
Digitally signed by G.SARAVANAKUMAR
Date: 2026.03.24 19:21:00 +0530

வசூலிப்பவர்களும் இந்த வழக்கில் சாட்சிகள் இல்லையென்றால் சரிதான். சம்பவ இடத்தில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்., சம்பவ இடம் வனப்பகுதி என்பதால் குரங்குகள் கேமராக்களை அடிக்கடி பழுதாக்கிவிடும்.

2. கக்கநள்ளா சோதனைச் சாவடி தமிழகத்தின் முக்கிய எல்லைப் பகுதி என்று சொன்னால் சரிதான். புலன் விசாரணை அதிகாரி அவருக்கு கீழ் பணிபுரிந்த காவலர்களை சாட்சிகளாக வைத்து இந்த வழக்கை பதிவு செய்துள்ளார் என்று சொன்னால் சரிதான். எதிரிகள் வந்ததாக சொல்லப்படும் போக்கு வண்டியின் பதிவு எண், ஓட்டுநர் பற்றிய விவரங்களை புலன் விசாரணை அதிகாரி விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

3. எதிரிகளிடமிருந்து பிளாஸ்டிக் கவரில் இருந்த வழக்குச் சொத்துக்களை கைப்பற்றியதாக குறிப்பிட்டிருந்தார் என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜரில் பிளாஸ்டிக் கவர் பற்றி குறிப்பிடவில்லை என்றாலும், 20 கிராம் கஞ்சா என்று மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. சோதனை விருப்பக் கடிதத்தில் சாட்சிகள் யாரும் கையொப்பமிடவில்லை என்று சொன்னால் சரிதான். புலன் விசாரணை அதிகாரி

G.SARAVANAKUMAR Digitally signed by G.SARAVANAKUMAR Date: 2026.03.24 19:21:05 +0530

வழக்கை முறையாக புலன் விசாரணை செய்யாமல் காவல் நிலையத்தில் வைத்து வழக்கு ஆவணங்களை தயார் செய்து எதிரிகளுக்கெதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும், எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in open Court read over / interpreted to the witness and same has been admitted by the witness to be correct.

G.SARAVANAKUMAR Digitally signed by G.SARAVANAKUMAR Date: 2026.03.24 19:21:12 +0530

**PRINCIPAL DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, GUDALUR.**